# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை
## அசல் வழக்கு எண்.152/2018

வா.சா.1– குறுக்கு விசாரணை – நாள் 28–01–2026.

பெயர் = நாராயணன்

வா.சா.–1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1,3,5,9 முதல் 13 ம் பிரதிவாதிகள் தரப்பில் கு.வி.–

(1) தாவா வழக்கின் சர்வே எண்.24/15, 24/16 ல் 73 செண்டு ஆதியில் சக்கரைக்கு பாத்தியமானது என்றால் சரிதான். 13 ம் பிரதிவாதி வெள்ளையனின் தந்தை தான் சக்கரை என்றால் சரிதான். சக்கரையின் 73 செண்டிற்குள் நுழைய மேற்கே உள்ள தொட்டியங்குளம் ரோட்டின் வழியாகத்தான் சென்று வந்தார் என்றால் சரியல்ல ரோடு இல்லை புஞ்சையாக இருந்தது புஞ்சை வழியாக சென்றுவந்தார் என சாட்சி கூறுகிறார். பிராதில் சொல்லியுள்ள மேற்கே பிள்ளையார் தொட்டியங்குளம் செல்லும் ரோடு எப்போது போடப்பட்டது என்றால் எனக்கு நினைவு தெரியும்போதே மேற்படி ரோடு உள்ளது என சாட்சி கூறுகிறார். சக்கரைக்கு அவரது இடத்திற்கு செல்ல மேற்கே உள்ள ரோட்டைத்தவிர வேறு பாதை இல்லை என்றால் சரியல்ல. மேற்கே உள்ள ரோட்டைத்தவிர வடக்கு, கிழக்கு, தெற்கு சர்வே பாதை கிடையாது என்றால் சரிதான். சக்கரையின் மொத்தசொத்தில் மேற்குப்பக்கம் நான் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் பிள்ளையார்தொட்டியங்குளம் போகும் சாலைக்கு கிழக்கு என நான்குமாலில் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிராது சொத்துவிவரத்தில் மேற்கே பிள்ளையார்தொட்டியங்குளம் செல்லும் சாலை என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் சின்ராஜ் (காளிச்சாமி) புஞ்சைக்கும், வண்டிப்பாதைக்கும் – தெற்கு என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பத்திரத்தில் சொன்ன அதே நான்குமால்தான் பிராது சொத்துவிவரத்தில் வடக்கே சின்ராஜ் (காளிச்சாமி) புஞ்சை மற்றும் வண்டிப்பாதை தற்போது ரோடு என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

(2) தற்போது ரோடு என காண்பிக்கப்பட்டுள்ளது பிள்ளையார்தொட்டியங்குளம் செல்லும் மேற்குப்புறம் உள்ள ரோடு என்றால் சரிதான். காளிச்சாமி என்பவரின் சர்வே எண்.24/16B என்றால்

எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.1ல் வடக்குப்பக்கம் ரோடு என காண்பிக்கப்படவில்லை, பிராதில் நான் ரோடு என காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். பிராதில் கிழக்குப்பக்கம் சக்கரை வகையறா புஞ்சை என இருப்பதை தான் பிரதிவாதிகள் பிளாட்போட்டு வாங்கியுள்ளார்கள் என்றால் சரிதான். சக்கரை அவருடைய இடத்திற்கு செல்வதற்கு போட்டுக்கொண்ட வண்டிப்பாதையைதான் சொத்து விவரம் மற்றும் பத்திரத்தில் வடக்குபக்கம் வண்டிப்பாதை என காண்பித்துள்ளார் என்றால் சரியல்ல. பத்திரத்தில் காண்பித்துள்ள வண்டிப்பாதை வேறு இடம் என சாட்சி கூறுகிறார். தாவாச்சொத்தின் வடக்கு அத்தில் கிழமேல் பாதை ஏற்படுத்தக்கூடாது என பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் மூலம் தாவாச்சொத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியும். ஆணையர் அறிக்கையில் ABQP என்ற பகுதியில் தான் பாதை ஏற்படுத்தக்கூடாது என பரிகாரம் கோரியுள்ள பகுதி என்றால் சரிதான். ABQP பகுதியில் வீடு, ஆழ்துளைக்கிணறு, படப்பு, குப்பை, விறகு எதுவும் போடவில்லை என்றால் சரிதான். ABQP பகுதியில் அரசாங்கத்திலிருந்து இரும்பு பைப் குடிநீர் குழாய் போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதி, பிரதிவாதிகளுக்கும் அந்த வழியாக மின்சாரம் செல்கிறது என்றால் சரிதான். சக்கரையிடம் கிரையம் வாங்கியுள்ள நபர்கள் அவர்கள் இடத்திற்கு செல்வதற்கு ABQP பகுதியை தவிர வேறு பாதை இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் இரண்டுபக்கமும் காலியாக விட்டு ABPQ பகுதியிலிருந்து தொடர்ச்சியாக பாதை விட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல.

(3) பிரதிவாதிகளும் அவர்களுக்கு கிரையம் கொடுத்த சக்கரையும் ABPQ பகுதியைதான் பாதையாக பயன்படுத்தி வந்தார்கள் என்றால் சரியல்ல. பள்ளிக்கூடத்திற்கு 1–1/2 செண்டு இடம் கொடுத்தேன். அதனை கழிக்காமல்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2,3 பட்டாவில் மோசடியாக பாதையை காண்பிக்காமல் நான் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.24/15ல் வடக்குப்பக்கம் பாதையை காண்பித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4,5,6 ற்கும் தாவா பாதைக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. தாவாச்சொத்தை தரிசு என காண்பித்து மோசடியாக சாகுபடி அடங்கல் வா.சா.ஆ.7 வாங்கி வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய வீட்டிற்கு அரசாங்கத்தில் இருந்து குடிநீர் குழாய் இணைப்பு வழங்காததால்தான் இந்த பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது மனைவிக்கும், பிரதிவாதிகளின் மனைவிகளுக்கும் குடிநீர் குழாய் பிரச்சனை ஏற்பட்டதால் தான் தாவாச்சொத்தை சர்வேயரை வைத்து அளந்து பார்த்தோம் என்றால் சரியல்ல அதற்கு முன்பாகவே அளந்து பார்த்தோம் என சாட்சி கூறுகிறார்.

தாவாச்சொத்து எப்போது அளந்து பார்த்தேன் என்றால் அடிதடி ஏற்பட்டு காவல்நிலையம் சென்ற பிறகு வழக்கு தாக்கல் செய்வதற்கு 20 நாட்களுக்கு முன்பாக அளந்து பார்த்தேன் என சாட்சி கூறுகிறார். சக்கரை என்னிடம் இடத்தை விற்கும்போது வண்டிப்பாதையை கழித்துதான் கிரையம் கொடுத்துள்ளார் நான் மோசடியாக பட்டா பெற்றுக்கொண்டு பிரச்சனை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. பக்கத்து வீடுகளில் ஏற்பட்ட குழாய் சண்டையை மனதில் வைத்து பிரச்சனையை பெரிதாக்கி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2026.01.28 14:15:10 +0530